முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1587

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.02.2024,** வெள்ளிக்கிழமை

1. ஞானபண்டிதன் என் அவதாரமாக
ஞாலமதில் பேரற்புதங்கள் நிகழ்த்த ஞானம் அருளிவந்த அரங்கனே
ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 19 ம் நாள், 02.02.2024, வெள்ளிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் உன் சக்திபலம் கூட
ஆசியதும் அரங்கன் உன் பெருமை உலகறிய
வாசிவென்ற ஞானியர் படை அனைத்தும்
வலம் வந்து உன் கொள்கையை உலகுக்கு எடுத்துச் செல்ல
3. செல்லவே பேரற்புதத்தை
சிறப்பாக ஆறுமுகன் யான் சேவையாக உலகுக்கு
மறுப்பின்றி வரமாகத் தந்து
மண்ணுலகில் பேரியக்கம் புரிந்து வர
4. வருகவே அரங்கன உன் பேர் சொல்லி
வல்லமையான அன்னதானம் நடக்கின்றதோ
தருகின்ற இடத்திலெல்லாம் ஆறுமுகன் யான்
தக்கபடி ஆற்றலாக சக்தியாக கலந்துள்ளேன்
5. உள்ளபடி உன் பேர் சொல்லி உலகினிலே
உயர்தர்மம் செய்வதோடு உபதேசங்கள் பல
அரங்கன் நீ தந்த கொள்கைகளை
அனுகி உலகோர்க்கு எடுத்துச்செல்லும்
6. செல்லும் அன்பர்கள் அனைவருக்கும்
செப்பிடுவேன் ஆறுமுகன் யான் பெரும்துணையாக நின்று
நின்றுமே உலகமெங்கும் அரங்கன் உன் அவதாரம்
நிலவுலகில் நீ படைக்க வந்த மகிமை

7. மகிமையை உலகோர் அறிய
மகத்துவம்பட வழி நடத்தி வருகின்றேன்
அகிலத்தில் அன்னதனால் அரங்கன் தொடர்புகூட்டி
உலகோர் அறநெறியோடு ஞானத்தை பயில
8. வருங்காலம் அவர்கட்கு பிறவாபேறு
வையகத்தில் இருக்கும் காலமே
என் காட்சி நிலைபாடு உருவாகி
ஆகியே உலகமாற்ற நிகழ்வில்
9. அனைவரும் பங்குகொண்டு சிறக்க நேரும்
வகைபட அரங்கன் தொடர்பு கூட்ட
வரமாக இந்த சித்தி உருவெடுக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–